2002 மே 7]

2,34,356 என்று இருக்கிறது. பரப்பளவு 590.87 சதுர கிலோமீட்டர் இருக்கிறது. கிராமங்களுடைய எண்ணிக்கை 125 ஆக இருக்கிறது. ஊராட்சிகளுடைய எண்ணிக்கை 88 ஆக இருக்கிறது. புதிதாக ஒரு வட்டத்தைப் பிரிக்க வேண்டுமென்றால் குறைந்தது 2½ இலட்சம், 3½ இலட்சம் மக்கள் தொகை இருக்க வேண்டும். பரப்பளவை எடுத்துக்கொண்டால் 560-க்கு மேல் இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய அந்த வட்டத்தினுடைய மக்கள் தொகை இரண்டு இலட்சத்து 34 ஆயிரம் ஆக இருக்கிறது. ஆகவே, தற்சமயம் அந்த அளவுகோலின்படி சாத்தியக்கூறு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 300, திரு. ப. ஆண்டிவேல், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

300—

பேருந்து வசதி

***9723—திரு. ப. ஆண்டிவேல்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியில் கரிக்காலி, சி.சி. குவாரிக்கு போதிய பேருந்து வசதி இல்லாததால், குஜிலியம்பாறையில் இருந்து சி.சி. குவாரி வரை பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வேடசந்தூர் தொகுதியில் உள்ள கரிக்காலி மற்றும் சி.சி. குவாரிக்கு சிற்றுந்துகள் மூலம் பொதுமக்களின் தேவைக்கேற்ப போதிய போக்குவரத்து வசதி உள்ளதால் கூடுதலாகப் பேருந்து வசதி செய்து கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2002 மே 7

திரு. ப. ஆண்டிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதியில் சி.சி. குவாரி, புளியூர் சிமெண்ட் பேக்டரிக்குத் தேவையான கற்கள் எடுக்கின்ற இடம் ஆகும். அந்தக் குவாரியிலே 1,500 தொழிலாளர்களும், அதனுடைய கிளையாக இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிற கரிக்காலியிலே ஆயிரம் தொழிலாளர்களும் வேலை செய்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல தனியார் மினி பஸ்கள் போவது உண்மை. ஆனால் அந்த பஸ்கள் போனாலும்கூடக் கூடுதலாக ஊழியர்கள் பணிபுரிகின்ற காரணத்தால் அவர்களுக்குப் போதுமான பஸ் வசதி இல்லை என்பதால் இப்போது புது பஸ்கள் வாங்க இருக்கிற திட்டத்திலாவது சேர்த்து நமது புரட்சித் தலைவியினுடைய அரசு அந்த சி.சி. குவாரிக்கு, கரிக்காலிக்குப் புதிய பேருந்துகள் விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜிலியம்பாறை சி.சி. குவாரி வழித்தடத்தின் தூரம் 12 கிலோமீட்டர். இதிலே குஜிலியம்பாறை முதல் கரிக்காலி வரை 4.3 கிலோமீட்டர் சாலை அகலமாக உள்ளது. கரிக்காலி முதல் சி.சி. குவாரி வரை 7.7 கிலோமீட்டர் மெட்டல் சாலையாக உள்ளது. இச்சாலை குறுகலாகவும், சாலையின் கற்கள் பெயர்ந்தும், சாலை அரிப்பு அதிகமாகவும் உள்ளதால் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்க முடியாத நிலையில் சாலை வசதி உள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தச் சாலை வசதியை மேம்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பாரேயானால் சாலை வசதி மேம்பாடு அடைந்ததும் அந்த வழித்தடத்தில் பேருந்துகள் விடுவது பற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *301*, திரு. டி. மணி, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.